செ.வெ.எண்: 44 நாள்: 20.10.2021

## பத்திரிக்கைச் செய்தி

நாகப்பட்டினம் மாவட்டம் ஆறு வட்டாரங்களை உள்ளடக்கிய பகுதியில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் மக்கள் தொகை 5,85,421 ஆகும். இதில் 3,90,130 பேர் முதல் தவணையும் 1,48,756 பேர் இரண்டாம் தவணையுமாக மொத்தம் 5,38,886 பேர் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர். இதுவரை 5 கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு அதில் 1,27,455 பேர் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டு பயனடைந்துள்ளனர். எதிர்வரும் 23.10.2021 அன்று 6-ஆவது சிறப்பு மருத்துவ முகாம் 500-க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா தொற்றினை முற்றிலும் ஒழிக்கும் விதமாக அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், வட்டார பகுதிகளிலும் மருத்துவ முகாம்கள் அமைத்தும் தடுப்பூசி முதல் தவணை மற்றும் இரண்டாவது தவணை தடுப்பூசி போடப்படவுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயங்கி வரும் வணிக வளாகங்கள், மளிகை மற்றும் அனைத்து கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் முதல்தவணை, இரண்டாவது தவணை தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் இந்த 6-ஆவது சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமினை அனைத்து பொதுமக்களும் பயன்படுத்தி தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். அதிதீவிர கொரோனா தொற்று பரவாமல் தடுத்திட தடுப்பூசி ஒன்றே சிறந்த தடுப்பு முறையாகும்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**